முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் சித்திரை மாதம் 19ம் திகதி முதல் சித்திரை மாதம் 26ம் திகதி வரை**

**(02.05.2021 ஞாயிறு முதல் 09.05.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மரணத்தை எண்ணி கலங்கும் மானிடா
   மார்க்கம்தனை கூறி அகத்தியன் யானும்
   தரணியில் இந்தியா தமிழகத்தில்
   தக்க பிலவ தகர் திங்களில்
2. திங்களில் மூவாறோர்திகதி மேல் இருபானாற் திகதிவரை
   தேசமதில் நடக்கும் வார நிகழ்வாக
   இங்கணமே எதிர்கால பலன்குறித்த ஆசி
   இயம்பிடுவேன் அரங்க ஞானி வேண்டிட
3. வேண்டிட கொத்து கொத்தாய்
   வீழுகின்ற மக்கள் தனக்கு
   உண்டான பாதுகாப்பு குறித்த
   உபாயமாக வழிமுறை தருவேன்
4. தருவேன் ஞான ஆளுமையாக
   தலைமைகள் செயல்படாவிட்டால்
   கருமவினையாகி கலிதன்னில்
   கணக்கிலா உயிர்பலி மிக நேரும்
5. நேருமே தலைமைக்கு சாபம்
   நீதியில்லா அரசெனும் குற்றம்
   வருகவே கலியினில் உருவாகி
   வரலாற்றில் பங்கமாக இடம்பெறக்கூடும்
6. கூடாத இந்தவித நடப்புகால
   கிருமி வழி பேரிடர் கட்டமதை
   ஈடேற்றா வினை வெல்ல கிடைத்த
   இயல்பான வாய்ப்பாகக் கருதி
7. கருதியே ஆளுமை சக்திகள்
   களப்பணி மக்களை நோக்கி
   உறுதி கொண்டு முடுக்கிவிட
   ஊழலில்லா சேவையாக ஆற்றி

8. ஆற்றியே மக்களை வாட்டி
அபகரிக்கின்ற வரி வசூல் முறைகளை
மாற்றம் செய்து மக்களிடை
மனித நேயம்பட உதவிகள் புரிய

9. புரிதலுடன் மாநில ஆளுமையில்
பிரச்சினை தரும் உரிமை மீறல்
வரிக்கொடுமை அதிகாரத்துவ தாக்கம்
வளர்ச்சி வளத்தை முடக்கும் செயல் காணா

10. காணா நடுவனும் நடுநிலையாக
கனிவாக ஆளுமை தொடர்ந்து
ஞானா ஆட்சிதனை புரிந்தால்
நச்சுக் கிருமி வழி உயிர்பலி துன்பம்

11. துன்பம் இயற்கை பாதுகாப்பில்
தானாக விலகி மக்களுக்கு பாதுகாப்பு
இன்பமாக மாறும் ஞானிகள் வழிவர
எல்லா வகையும் மாற்றம் ஏற்றம் பெறும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் சித்திரை மாதம் **19**ம் நாள் **02.05.2021** ஞாயிற்றுக் கிழமை முதல் சித்திரை மாதம் **26**ம் நாள் **09.05.2021** ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நிகழ்வுகள்.

மரணம் வந்துவிடுமோ எப்போது வரப்போகிறது நமக்கு என்று மரணத்தை எண்ணி கலங்கி நிற்கின்ற மனிதர்களே நீங்கள் கடைத்தேறிட அற்புத மார்க்கம் ஒன்றை கூறுகிறேன் அகத்திய மகரிஷி யானும் இந்திய தேசத்திலும் தமிழகத்திலும் பிலவ வருடம் சித்திரை மாதம் **19**ம் நாள் **02.05.2021** ஞாயிற்றுக் கிழமை முதல் சித்திரை மாதம் **26**ம் நாள் **09.05.2021** ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை எதிர்கால பலன்களாக அரங்க மகான் கேட்க வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலகைப் பற்றியுள்ள இயற்கை பேரிடரால் கொத்து கொத்தாய் மரணிக்கின்ற மக்களின் மரணத்தை வென்று பாதுகாப்பான வாழ்வை வாழ்ந்திட பாதுகாப்புதனை வழிமுறைகளை உபாயமாக உரைக்கின்றேன் அகத்திய மகரிஷி யானும்.

நாட்டை ஆட்சி புரிவோரும் அதிகார வர்க்கத்தில் உள்ள தலைமைகள் தயவுடன் நடந்து தமது ஆளுமையை ஞானத்தின் வழியில் தர்மத்தின் வழியில் சென்று செயல்பட்டால்தான் மக்கள் பாதுகாப்பாய் இருப்பார்கள் அவ்வாறு செயல்படாவிட்டால் அவர்களது கருமவினைகள் மிகுந்து நாட்டினில் உயிர்பலிகள் மிகுதியாக நேரிடும். மக்கள் பலி அதிகமாவதால் மக்களின் சாபம்

தலைமை பொறுப்பில் உள்ளோர்க்கு வந்து சேரும், நீதியில்லாத அரசன் என்ற பழிச்சொல்லும் குற்றமும் வந்துவிடும். அவர்களது ஆட்சி கலியுக வரலாற்றில் குற்றமாக இடம் பெற்றுவிடும்.

ஆதலினால் தற்காலத்தில் நாட்டினில் பரவி வரும் நச்சுக் கிருமிகளால் உண்டாகும் பேரிடர் கஷ்டங்களை, வினைகளை வெல்லும் உபாயமாக வினைகளை வெல்ல இயற்கையாகவே கிடைத்த வாய்ப்பாக எண்ணி தாம் செய்த பாவங்களை போக்கிக் கொள்ள கிடைத்த வாய்ப்பாக கருதி ஆட்சி புரிவோர் இனிமேலாகினும் மக்களை அனுகி களப்பணிகளை நேரில் இறங்கி செய்வதுடன் உறுதியுடன் அரசின் செயல்பாடுகளை முடுக்கிவிட்டு சேவை செய்ய வேண்டும் மக்களுக்கு இந்தவித நற்சேவைகளில் செயல்படும் போது ஊழல்கள் செய்யாமல் தூயமனதுடன் செயல்பட வேண்டும்.

இவ்விதம் தூய்மையுடன் செயல்பட்டு வருவதுடன் ஏற்கனவே துன்பத்தில் வாடும் மக்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் விதமாக விதிக்கப்பட்டுள்ள வரிவசூல் முறைகளை மாற்றி மக்களிடம் மனித நேயத்துடன் நடந்து மக்களுக்கு நன்மைகளை செய்து மாநில ஆட்சி பொறுப்புகளில் உரிமை மீறல் செய்யாமல் நடந்திட வேண்டும்.

மத்திய அரசு தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி வரிக்கொடுமை செய்து நாட்டின் வளர்ச்சியையும் வளத்தையும் முடக்காமல் நடந்து கொண்டு நடுநிலை நின்று கனிவுடன் ஆட்சி புரிய நலம் அவ்விதம் செயல்பட்டால் நச்சுகிருமிகளால் உண்டாகும் உயிர்பலிகள் குறையும். கனிவான ஞான ஆட்சி நடந்தால் இயற்கையும் மகிழ்ந்து மக்களுக்கு பாதுகாப்பு அளிக்குமப்பா.

இயற்கையே மகிழ்ந்து மக்களை பாதுகாக்கும் நன்னெறியாகிய ஞானிகள் கூறும் தர்மத்தினால் தயவினால் ஆகிய ஞான வழியினில் மக்களும், ஆட்சியர்களும் வந்து கடைபிடித்தால் எல்லா வகையிலும் உண்டான துன்பமெல்லாம் மறைந்து நல்ல மாற்றங்கள் நாட்டினில் விரைந்து உருவாகி நாடு நல்ல வளமும் முன்னேற்றமும் அடைந்திடும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–